# சட்டப்பேரவை விதி 110 கீழ் பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் 12.01.2011 இன்று படித்தளித்த அறிக்கை

பிரதம பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு பணிநிலைத்திறன், பணியாளர் சிறப்பு துணை விதிகள், பணிவரன்முறைப்படுத்துவது மற்றும் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்தல் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை பரிசீலித்து பணியாளர் பணிநிலைத்திறன், உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை, ஆண்டு ஊதிய உயர்வு, இலாபத்தில் செயல்படும் பால் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களின் ஊதிய உயர்வு போன்ற பரிந்துரைகளை ஏற்று அரசு ஆணை வெளியிட்டதுடன், மேற்படி பிரதம பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு, அப்பிரதம சங்கங்கள் 2008–09 ஆம் ஆண்டு லாபத்தில் செயல்படும் பட்சத்தில் 20 சதவீதத்திற்கு மிகாது சம்பள உயர்வு வழங்க ஏற்கெனவே ஆணையிடப்பட்டது. அவ்வாணையின் அடிப்படையில் ஏற்கெனவே 1.10.2009–ல் வழங்கப்பட்ட சம்பள உயர்வில் தற்போது 54 சதவீதம் சம்பள

உயர்வு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி பணியாளர்கள் ஒவ்வொரும் குறைந்தபட்சமாக மாதம் ரூ.125/-லிருந்து அதிகபட்சமாக ரூ.500/- வரை பயன்பெறுவர். இது தவிர 1.10.2009 முதல் வழங்கப்பட்ட சம்பள உயர்வில் பயனடையாதவர்கள் மற்றும் 1.4.2009க்கு பிறகு பதிவு செய்யப்பட்ட/மறுமலர்ச்சி செய்யப்பட்ட சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ.125/- வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தமிழ் நாட்டில் உள்ள 8246 பிரதம பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் சுமார் 18588 பணியாளர்கள் பயனடைவார்கள். இந்த சம்பள உயர்வு 01.01.2011 முதல் அமுல்படுத்தப்படும்.

2/2

உ. மதிவாணன்,
பால்வளத்துறை அமைச்சர்